



புதிய விரிவான சிற்றுந்து திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டத்திற்கான சிற்றுந்து சேவைகளை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்து, சிற்றுந்து பேருந்தில் பயணம் செய்தனர். இந்நிகழ்ச்சியில் முதன்மைச் செயலாளர்,போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையர் சுன்சோங்கம் ஜடக் சிரு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள்,அரசுத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## ‘எய்ம்ஸ்’ கட்டுமானப் பணி! ஒன்றிய அரசின் கற்பனைக் காட்சி!

# 2 மக்களவைத் தேர்தல்கள் முடிந்த பிறகும் ‘எய்ம்ஸ்’ கட்டுமானப் பணிகள் முடியவில்லை!

## வலைதளப் பதிவில் — முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஜூன் 19 -

**மதுரை எய்ம்ஸ் என்ன ஆனது எனக் கேட்டதற்கு, அது தொடர்பான கற்பனைக் காட்சிகளை ஒன்றிய அரசு உருவாக்கி அளித்துள்ளது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விமர்சித்துள்ளார்.**

கடந்த 2019 ஜனவரி மாதம் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். ஆனால், இரண்டு மக்களவைத் தேர்தல்களுக்கு பிறகும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கான கட்டுமானப் பணிகள் முடிக்கப்படவில்லை. தற்போது, 9 மாதங்களில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வரவிருக்கும் நிலையில், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையின் முப்பரிமாண வீடியோவை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது.

இது குறித்து சமூகவலைத்தளப் பதிவொன்றை வெளியிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அவர்கள், “மதுரைக்கு வந்த ஒன்றிய உள்துறை அமைச்சர் எய்ம்ஸ் என்ன ஆனது எனச் சென்று பார்த்தாரா? எனக் கேட்டிருந்தேன்,

அதற்குப் பதிலாக, இந்தக் கற்பனைக் காட்சிகளை உருவாக்கி அளித்துள்ளார்கள் 2026 தேர்தலுக்கு இந்த ஒரு வீடியோ போதும் என நினைத்துவிட்டார்களா? இதற்கே 10 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன” என்றும் பதிவிட்டுள்ளார்.

## நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழகங்கள் சார்பில்

# கழக அரசின் 4 ஆண்டுகால சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!

*நாமக்கல், ஜுன் 19-*

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்கவும், மாநில இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்த நாளை முன்னிட்டும், தமிழர் நலன் காத்த கலைஞர் அவர்களின் புகழ் பரப்பும் வகையிலும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனைகளை விளக்கியும் ஒன்றிய, நகர, பேரூர் கழக பகுதிகளில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெறும் விவரம் வருமாறு:-

29.06.2025-எலச்சிபாளையம் மேற்கு ஒன்றியம் -கோபாலகிருஷ்ணன்

30.06.2025-பொத்தனூர் பேரூர்- நந்தகுமார்

01.07.2025-திருச்செங்கோடு மேற்கு நகரம்- சேலம் சுஜாதா

03.07.2025 -திருச்செங்கோடு தெற்கு ஒன்றியம்- எட்டையாபுரம் தமிழ்பிரியன்

04.07.2025-பரமத்தி ஒன்றியம்-எட்டையாபுரம் தமிழ்பிரியன்

05.07.2025-வேலூர் பேரூர்-ஆரணிமாலா

06.07.2025-எலச்சிபாளையம் கிழக்கு ஒன்றியம்- ஆரணிமாலா

08.07.2025-பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம் - ஆடுதுறை உத்திராபதி

09.07.2025-திருச்செங்கோடு கிழக்கு நகரம் -ஆடுதுறை உத்திராபதி

10.07.2025- வெங்கரை பேரூர் -பவாணி கண்ணன்

11.07.2025-பள்ளிபாளையம் மத்தியம் ஒன்றியம் - பவாணி கண்ணன்

12.07.2025 -மல்லசமுத்திரம் ஒன்றியம்- போடிகாமராஜ்

13.07.2025 பள்ளிபாளையம் வடக்கு ஒன்றியம்- போடிகாமராஜ்

14.07.2025-குமார பாளையம் வடக்கு நகரம்- கோனூர் வைரமணி

15.07.2025-மோகனூர் மேற்கு ஒன்றியம்- நெல்லை ரவி

18.07.2025-பாண்டமங்கலம் பேரூர்-மேகநிதி

19.07.2025-கபிலர்மலை ஒன்றியம்-ஆரூர்மணிவண்ணன்

20.07.2025-படைவீடு பேரூர்-ஆரூர்மணிவண்ணன்

21.07.2025-ஆலாம்பாளையம் பேரூர்-தூத்துக்குடி சரத்பாலா

22.07.2025-பரமத்தி பேரூர்-தூத்துக்குடி சரத்பாலா

இவ்வாறு மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மன்னார்குடியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய அங்காடி கட்டிட கட்டுமானப் பணியினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார். உடன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், ராங்கியம் வருவாய் கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 11.06.2025 அன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில், மாற்றுத்திறனாளிகளுக்கு தக்க செயலியுடன் கூடிய திறன் பேசிகளை வழங்கினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை !

*திருச்சி, ஜுன் 19-*

திருச்சி தெற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (19.06.2025-வியாழக்கிழமை) காலை 08.30 மணியளவில் சத்திரம் பேருந்து நிலையம் வி.என். நகர், திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில்” மாவட்ட அவைத்தலைவர் என்.கோவிந்தராஜன் தலைமையில் நடை பெறுகிறது.



இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர், தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்

1. கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக உறுப்பினர் சேர்க்கையை ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற தலைப்பின்கீழ் ஒருங்கிணைத்தல் குறித்து.

2. BLA2, BLC பணிகள் குறித்து,

3.கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு பள்ளி கல்வித் துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

## இரா.முருகையன் தலைமை! இரா.மாரிமுத்து வரவேற்புரை!

# நாகை நகரில் கழக உறுப்பினர்களை தீவிரமாக சேர்ப்போம்!

## நகரக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்- என்.கௌதமன் சிறப்புரை! இல.மேகநாதன், மு.லோகநாதன் பங்கேற்பு!

நாகை, ஜூன் 19-

நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் நாகையில் டி.பி.ஜி.திருமண மண்டபத்தில் நடைபெற்றது. ஆலோசனை கூட்டத்திற்கு நகரக் கழக அவைத் தலைவர் இரா.முருகையன் தலைமை தாங்கினார். நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரி முத்து வரவேற்றார். மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், நகர நிர்வாகிகள் ஆர்.ரமணி, பி.திலகர், சித்திரா குலோத்துங்கன எம்.கே. அபுபக்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நாகை மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல. மேநாதன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி அண்ணாதுரை, எஸ்.பால்ராஜ், எம்.தினேஷ்குமார், ஆர்.ஆர் குலோத்துங்கன், டாக்டர்பால் ராஜ, எஸ் பாலமுரளி, வெற்றி வேல் முருகானந்தம், மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் எஸ்.என். மோகனதாஸ் மாவட்ட சார்பு துணை அமைப்பாளர்கள் தி.கலையரசன், கருப்பாயி, வள்ளி, ஆர்.ஆர்.பாரி எஸ்.எம்.எ.கணேசன், பி.நாகதேவன். நிஜாம்,ஆர்.கே.பிரதீப் கேப்ஸ்ரவி, பி.கல்பாணம், அய்யாவுகணேசன். ஏ பாலா, ஆன்டிசாமி எலக்ட்ரிகல்பாலா இக்பால், முகுந்தன். நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். எஸ்.சத்தியன் மற்றும் வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள். சார்பு அணிகளின் நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முடிவில் நாகை நகர துணைச் செயலாளர் வெற்றிலைகடைசிவா நன்றி கூறினார்.கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கடந்த ஜூன் 1ம் தேதி மதுரை மாநகரம் கூடல் நகரில் கலைஞர் திடலில் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுவைக் கூட்டி தலைமையேற்று தீர்மானங்கள் நிறைவேற்றி கழகப் பொதுக்குழு கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்த கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கு நாகை நகர தி.மு.க. சார்பில் நன்றியையும், பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது. மதுரையில் நடந்த கழக பொதுக் குழுவில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானம், கடந்த ஜூன் 7ம் தேதி மாவட்ட செயலாளர்கள், சட்ட மன்ற, நாடாளுமன்ற கூட்டத்தில் உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள் கலந்து கொண்ட காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற கூட்டத்தில் கழகத்தலைவர் தளபதி அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் எல்லோருக்கும் எல்லாம் எனும் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக செயல்பட்டு வருவதால் ஒவ்வொரு விட்டிலும், ஒருவராவது ஏதேனும் ஒரு திட்டத்தில் பயனாளியாக உள்ளார். இத்தகைய நலத்திட்டங்களும் மாநிலத்தின் வளர்ச்சியும், தொடர்ந்திடவும், மாநில உரிமைக்கான போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுக வும். நமது மண், மொழி, மானம் காத்திடவும் தமிழ் நாட்டின் அனைத்து குடும்பங்களும் ஒரு குடையின் இணைத்து வருகிற 2026 சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய காலத்தின் கட்டாயமாக உள்ளது. துளியும் சமரசமின்றி தமிழ்நாட்டின் உரிமைகளை காத்திடும் பொருட்டு ஓரணியின் தமிழ்நாடு என உறுப்பினர் சேர்க்கையை நாம் முன்னெடுக்க வேண்டுமென வும், கழகத்தின் சார்பில் நாகை நகரத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பூத் கமிட்டிகள் மூலம் ஒவ்வொரு வாக்குச்சாவடியில் உள்ள பாகத்திலும் குறைந்தபட்சம் 30சதவீத வாக்காளர்களை கழகத்தின் உறுப்பினர்களாக இணைத்திட இலக்கு நிர்ணயம் செய்திட வேண்டுமெனவும், வீடு விடாகச் சென்று அரசின் திட்டங்களையும், உரிமைப் போராட்டங்களையும் துண்டு பிரசுரங்கள் மூலமாகவும், நேரில் சென்று எடுத்து சொல்லி தமிழ்நாட்டின் வாக்காளர்களை ஓரணியின் தமிழ்நாடு என்ற முன்னேடுப்பில் இணைப்பதற்கான செல்களை நாம் மேற்கொள்ள வேண்டும் எனவும், ஜுன் 20ம் தேதி முதல் 40 நாட்கள் நாகை நகரத்தில் உள்ள வார்டு கழகச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் நகர்மன்ற உறுப்பினர்களுடன் ஒருங்கிணைந்து கழக ஆட்சியில் நாகை நகரத்திற்கு செய்திட்ட திட்டங்களை, மகளிர் உரிமைத் தொகை விடியல் பயணம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களையும் பொது மக்களிடம் எடுத்து கூறி தங்களுக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள இலக்கினை நிறைவு செய்திட வேண்டும் எனவும், கழகத்தின் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை பணியினை சிறப்பாக செய்து அதிகமான வாக்காளர்களை கழக உறுப்பினர்களாக இணைக்க உறுதி ஏற்று ஓரணியில் நின்று மீண்டும் 2026 ஆட்சி அமைப்போம் உறுப்பினர் சேர்க்கை பணியை செய்திட வேண்டும் என்றும், டெல்டா மாவட்டத்தின் வாழ்வாதாரமான விவசாயம் செழிக்க இந்த ஆண்டு மேட்டூர் அணையை ஜுன் 12ம் தேதியும், கல்லணையை ஜுன் 15ம் தேதியும் தனது பொற்கரங்களால் திறந்து வைத்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதமைச்சர் தளபதி அவர்களுக்குநன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு – (இரண்டு உறை) இனம் வாரியாக மின்னணு ஒப்பந்தம் முறையில்

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண். | 09/ கோ. அழைப்பு மையம்/ முநிவஅ /தபொ / வே /2025 / நாள்:11.06.2025. |
| நிதி ஆதாரம் | த.கு.வ.வாரிய நிதி |
| ஒப்பந்தக்காரர் தகுதி | நிறுவனங்கள் சட்டம் 1956/2013 அல்லது கூட்டாண்மை சட்டம் 1932 அல்லது தனிநபர் உரிமையாளர் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு சட்ட நிறுவனம் |
| ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர் | தலைமைப் பொறியாளர், த.கு.வ. வாரியம், வேலூர்– 6. |
| ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் இணையதளம் மூலமாக | 19.06.2025 முதல் 25.06.2025, 15.00 மணி வரை (as per server time) |
| இணையதள முகவரி | “https://tntenders.gov.in” (மின்னணு ஒப்பந்தம் முறையில்) |
| ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை | மின்னணு முறையில் இணையதளம் “https://tntenders.gov.in” மூலமாக. |
| ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக்கூட்டம் | 23.06.2025 அன்று மு.ப 11.00 மணிக்கு தலைமைப் பொறியாளர் அலுவலகம், த கு வ வாரியம், வேலூர் – 6. |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 25.06.2025 அன்று 15.00 மணி வரை மின்னணு ஒப்பந்தம் முறையில் டிஜிட்டல் ஒப்பம் இடப்பட்டு இணையதளம் “https://tntenders.gov.in” மூலமாக |
| ஒப்பந்தப்புள்ளி திறப்பு | 26.06.2025 அன்று 15.30 மணிக்கு த.கு.வ. வாரியம், தலைமைப் பொறியாளர் அலுவலகம், வேலூர் மின்னணு ஒப்பந்தம் முறையில் |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் உத்தேச மதிப்பு (ரூ. கோடியில்) (ச.ம.சே.வரி 18% உட்பட) | முன்வைப்பு தொகை (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாட்டில் (சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து) நீர் வழங்கல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக த.கு.வ. வாரியம் மூலம் பொதுவான அழைப்பு மையம் மற்றும் குறை தீர்க்கும் அமைப்பை நிறுவுவதற்கான முன்மொழிவு (RFP) கோரிக்கை [செயல்படுத்துதல் காலம்: 5 மாதங்கள், செயல்பாட்டு காலம்: 12 மாதங்கள்]. | 4.00 | 3.00 |

செ.ம.தொ.இ/ 3090 /ஒப்பந்தப்புள்ளி/2025 **தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம்**

**தலைமைப் பொறியாளர் (பொ), த.கு.வ.வாரியம், வேலூர்–6**




திருப்பூர் மாநகராட்சி, மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் கூட்டுறவுத்துறையின் சார்பில் பெட்ரோல் மற்றும் டீசல் சில்லரை விற்பனை நிலையத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் வசந்த ராம்குமார், வடக்கு மாநகரப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் ச.ராஜசேகரன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கீர்த்தி சுப்ரமணியம், பல்லடம் நகர கழக செயலாளர் நா.ராஜேந்திரகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பிரபு. இந்தியன் ஆயில் நிறுவன மண்டல மேலாளர் சதீஸ்குமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.